# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1804/13 - 2013 අප්‍රේල් මස 02 වැනි අඟහරුවාදා - 2013.04.02

*1804/13 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர், லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன் :-*

*(1) அம்பாந்தோட்டை துறைமுகத்தின் சுதந்திர துறைமுகப் பிரதேசத்தில் சுத்திகரிப்புக்காகச் சீனியை மூலப் பொருளாக இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யவும் ஏற்றுமதி செய்வதற்காகவுமான கருத்திட்டத்தை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காகச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங்காண்பதற்கு, லங்கா சுக்கர் ரிபைனரி கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் ("கருத்திட்டக் கம்பனி") 2013, பெப்புருவரி 07 ஆந் திகதி கருத்திட்ட ஒப்பந்தம் ஒன்றை இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொண்டது. இக்கருத்திட்டத்துக்கான மொத்த முதலீடு இருநூற்று இருபது மில்லியன் அமெரிக்க டொலராக (220 மில்லியன் அமெரிக்க டொலர்) இருக்கும் என்பதோடு, இத்தகைய கருத்திட்டம் தேசிய நலனைக் கொண்டதாக இருப்பதோடு அது நாட்டுக்குப் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஈட்டித் தருவதோடு மேலும் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கும் வழிகோலும் ;*

*(2) மேற்படி கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதி கருத்திட்டக் கம்பனி மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை ஆகியவற்றுக்கிடையில் சொல்லப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட 2013, பெப்புருவரி 7 ஆந் திகதியாகவிருக்கும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்காக, சொல்லப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத்தின் திகதியில் இருந்து ஏழு (07) வருடங்களுக்குள் கருத்திட்டத்தின் அமுலாக்கம் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் ;*

*(3) மேற்படி கருத்திட்டத்தின் தேவைகளுக்காக திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின்படி, இவ்வறித்தலின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலக்களிப்புக்கள் இக்கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகும்.*

**அட்டவணை**

*(அ)* **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, தேசிய இறைவரிச் சட்டம்**

*கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (2) வருடங்களின் பின்னால், அதில் எது முதலில் வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம்*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



2 - G 17482

பத்து (10) வருடங்களுக்கு நிறுவக வருமான வரி விலக்களிப்பொன்று தேசிய இறைவரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, பத்து (10) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததும், மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கருத்திட்டத்தை அமுலாக்கும் கருத்திட்டக் கம்பனி தொடர்பாக ஏற்றுமதிக்காக அக்காலப்பகுதியில் நிலவும் பொதுவான வரி அமைப்புக்கேற்ப வரி ஏற்புடைத்தாகும் என்பது கவனிக்கத் தக்கதாகும்.

மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் தொழில் புரியும் உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்படும் தொழில்நுட்பக் கட்டணங்கள் ஆகியவை தொடர்பாக கருத்திட்டக் கம்பனிக்கு தடுத்து வைக்கும் வரி விலக்களிக்கப்படும்.

இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு சொல்லப்பட்ட பத்து (10) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

கருத்திட்டக் கம்பனி மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை ஆகியவற்றுக்கிடையே செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்தின்படி, கருத்திட்டக் கம்பனியின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் ஐம்பது பேர்களுக்கு (50) நீ. உ. செ. வரியில் இருந்து விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.

(ஆ) ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்***

கருத்திட்ட அமுலாக்கக் காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி அத்துடன் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடைத்தாகாது.

(இ) ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்***

கருத்திட்ட அமுலாக்கக் காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி அத்துடன் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடைத்தாகாது.

(ஈ) ***2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்***

கருத்திட்ட அமுலாக்கக் காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி அத்துடன் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது ஏற்புடைத்தாகாது.

(உ) ***(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்***

(i) எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் சகல மூலதனப் பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக நேரகாலத்துக்கு ஏற்றவாறும் இலங்கையில் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும் ;

(ii) கருத்திட்டத்துக்குத் தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்களின் சகல இறக்குமதிகளும்/ உள்நாட்டுக் கொள்வனவுகளும் சுங்கக் கட்டண விதிப்பனவிலிருந்து விலக்களிப்பு அளிக்கப்படும். ஆயின், அத்தகைய பொருட்கள் கம்பனியின் பெயரில் அனுப்பப்பட வேண்டும் என்பதோடு கருத்திட்டத்தின் அமுலாக்கத் தேவைக்காக இறக்குமதி செய்யப்படுவதாக இருத்தல் வேண்டும் என்பதோடு மேற்படி இரு நிபந்தனைகளும் சபையினால் பரிசீலிக்கப்பட்டு அது தகும் என சபை நிர்ணயிக்க வேண்டும். ஆயின், கருத்திட்டக் கம்பனியின் நபர் எவரினதும் தனிப்பட்ட மற்றும் பிரத்தியேகப் பாவனைக்காக கருத்திட்டக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்படும் ஏதும் தனிப்பட்ட பொருட்களுக்கு இவ்விலக்களிப்பு ஏற்புடைத்தாகாது என்பதோடு, இவ்வொப்பந்தத்துடன் தொடர்புபட்ட தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஏதும் இறக்குமதிகளை தானாகவோ அல்லது அதன் அனுமதியின் பேரிலோ பரிசோதிப்பதற்கான உரிமையை சபை தன் வசம் கொண்டுள்ளது ;

(ஊ) **வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள்**

*வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்* I, IA , II , III , IV, V, *மற்றும்* VI *ஆம் பகுதிகளின் ஏற்பாடுகள் கருத்திட்டக் கம்பனியின் கருத்திட்டத்திற்கு அல்லது அது தொடர்பாக ஏற்புடைத்தாகாது.*

(எ) ***1969 ஆம் ஆண்டின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டம்***

*சபையினால் அனுமதிக்கப்பட்டவாறாக, கருத்திட்டத்தின் தேவைக்காகக் கருத்திட்டம் தொடர்பான மூலதனப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருட்களின் சகல இறக்குமதிகளும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும் என்பதோடு சரத்து (7) இல் குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் அமுலாக்கக் காலப்பகுதியின் போது திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுதலை வழங்கப்படும்.*

(ஏ) *இறக்குமதி செய்யப்படும் இடத்தில் மூலப்பொருட்களின் இறக்குமதிகள் தொடர்பில் விசேட பொருட்கள் மீதான விதிப்பனவில் இருந்து கருத்திட்டக் கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

*லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, பா. உ.*
*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.*

*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2013, மாச்சு 27.*

*4- 446*